


மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
கிடைக்கப்பெற்றது
11 NOV 1997
உரிய நடவடிக்கைக்காக
ஆணையாளர்

செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

# உதயதாரகை

கிறிஸ்தவ வாரப் பத்திரிகை

மலர்: 158 ஆரம்பம்: 1841 அக்டோபர் 1997 இதழ்: 21

பக்கங்கள் 8

'கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று; அதினால் மரணக் கண்ணிகளுக்குத் தப்பலாம்'

நீதிமொழிகள் 14. 27

## மக்கள் வெள்ளத்தில் ஆயரின் இறுதி ஊர்வலம்

காலஞ் சென்ற முன்னாள் பேராயர் டி. ஜே அம்பலவாணரின் இறுதி ஆராதனையில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான மக்கள் திரள், அன்னாரின் இழப்பு சமூகத்துக்குப் பேரிழப்பு என்பதை பிரதிபிம்பமாகக் காட்டியது.

மேற்படி ஆராதனை வட்டுக்கோட்டை ஆசனக் கோவிலில் 97- 10- 15 இல் நடந்தேறியது. ஆராதனைக்கு முன்னதாக ஓர் அஞ்சலிக் கூட்டம் நடாத்தப்பட்டது. இக்கூட்டத்தில் முறையே வண. எஸ். எஸ் ரெறன்ஸ்(மெதடிஸ்த திருக்சபை) வண. எஸ்.பி. நேசகுமார். (அங்கிலிக்கன் திருச்சபை), திரு எஸ். தனபாலன் யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் ), செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (இந்துமக்கள் சார்பாக), திரு. பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர் - பல்கலைக்கழகம்), அருட் தந்தை செல்வராஜா (கத்தோலிக்கத் திருச்சபை), கலாநிதி சண்முகதாஸ் (தமிழ்த்துறைத் தலைவர் ப.கழகம்). திரு சண்முகநாதன் (அரச அதிபர் யாழ்), திரு. ஜி. ராஜநாயகம் (முதல்வர் யாழ்ப்பாணக் கல்லூரி), கலாநிதி போட்டர் (மிஷனரி), திரு. சி. ஜெயரட்ணம் (ஆதீனப் பொருளாளர்), வண. எஸ். பி. ஜெயசிங்கம் (மூத்த குரு) ஆகியோர் அஞ்சலி உ.ரைகளை நிகழ்த்தினார்கள்.

பல நிறுவனங்கள், தனிநபர் சபைகள், கணக்கிலடங்கா கண்ணீர் அஞ்சலிகளை 'உதயன்' மூலமும், துண்டுப்பிரசுரங்கள் மூலமும் வெளிப்படுத்தினர்.


### இறுதி ஆராதனை

பேராயர் எஸ். ஜெபநேசனின் தலைமையில் ஆராதனை நடாத்தப்பட்டது. திருமதி ஜீவா இரத்தினசபாபதி தேவாரம் பாடினார். வண. ஏ ஜெயக்குமாரன், வண. டி ஆர். அம்பலவாணர், திரு. டி. எஸ். அம்பலவாணர். திரு, தர்சன் அம்பலவாணர் ஆகியோர் ஆராதனையில் பங்கெடுத்தனர் கிறிஸ்தவ இறையியற் கல்லூரியினரும், உடுவில் மகளிர் கல்லூரியினரும் விசேட பாடல்களைப் பாடினர்.

இரங்கல் உரைகளை கலாநிதி செல்வி. சி. வி. செல்லையா (முதல்வர் - உடுவில் மகளிர் கல்லூரி) வண. எஸ். ஜெயநேசன் ஆகியோர் நிகழ்த்தினர். அருளுரையை பேராயர் கலாநிதி எஸ்.

3 ஆம் பக்கம் பார்க்க

## சென்று வாரும் ஆயரே!



சென்று வாரும் ஆயரே - நீர்
உலகை வென்று விட்டீர்
விசுவாசத்தால் வென்று விட்டீர்
உமது பணியால் வென்று விட்டீர்

உற்றார் உறவினர் நண்பரெல்லாம்
சுற்றி நின்று வழியனுப்ப
உற்ற துன்பத்தில் ஆறுதலாய்
உதவும் திருச்சபை அருகிலிருக்க

மறையியல் பயில நீர் அமைத்த
இறையன்பர்களும் சூழ்ந்து நிற்க
உம் வாழ்வில் காட்டிச் சென்றபாதையை
எமது பணியாய் ஏற்று வாழ்வோம்

நித்திய அமைதியில் சேர்ந்திடுவீர்
நீடித்த ஒளியில் வாழ்ந்திடுவீர்
உம் வாழ்வில் காட்டிச் சென்றபாதையை
எமது பணியாய் ஏற்று வாழ்வோம்

ஆக்கம்
கிறிஸ்தவ இறையியல் கல்லூரிக் குடும்பத்தினர்

## சிறுவர்களின் பெலவீனமே வேலை கொள்வோரின் சொத்து

''சிறுவர்கள் எதையும் 'ஏன்' எனக் கேட்க மாட்டார்கள். தொழிலாளர் உரிமை இயக்கங்களை அமைக்க மாட்டார்கள் எனும் மனத்துணிவுதான் அவர்களைத் தொழிலாளர்களாக வைத்திருப்பவர்களுக்குப் பெரிய சொத்தாக உள்ளது'' என்று அருட் தந்தை ஒருவர் தெரிவித்தார்.

வாய்மூடி வேலை செய்யும் தொழிலாளர்களையே முதலாளிகள் விரும்புகின்றனர். இளைஞர்களை வேலைக்கமர்த்தினால் சம்பளம் முதலிய விடயங்களில் அவர்கள் 'ஏன்' 'எதற்காக' எனும் கேள்விகளைக் கேட்பர். சிறுவர்கள் அப்படிக் கேட்பதில்லை. சிறுவர்களின் இந்தப் பெலவீனம் தான் வேலைகொள்வோரின் சொத்தாக உள்ளது.

இவ்விடத்தில் சிறுவர்களின் பெற்றார்களை மட்டும் குற்றம் சுமத்துவதில் பிரயோசனம் இல்லை. ஒரு தந்தை பின்வருமாறு கூறினார். ''15 வயதுக்கு முன்பு தான் ஒருவன் நல்ல அப்பியாசத்தைப் பெறமுடியும். உடல் வளையக்கூடிய பயிற்சிகளை எடுக்க முடியும்''. பெற்றாரின் தவறான முடிவுகளோடு, அவர்களின் பொருளாதாரத்தில் ஒருவரும் அக்கறை இல்லாதிருப்பதுமே இதற்கு வேறு காரணங்கள்.

குறிப்பாக, பட்டாசுத் தொழில் முதலியவை சிறார்களுக்கு எதிர்காலத்தில் - உடல்,

3 ஆம் பக்கம் பார்க்க

## றாக்கிங்கை அனுமதிப்பதா?

பிரிட்டனில் டயானா கொடுமைக்காரப் பத்திரிகைக்காரரால் கொல்லப்பட்டபோது உலகம் தன் கண்டன அமைப்புகளை பத்திரிகைக்காரர் மேல் வீசியது

இப்போது கொடுமைக்கார் றாக்கிங்காரர் தமிழினத்துக்கு ஒரு சாபக் கேடாக மாறியிருப்பதைக் கண்டு எம் கண்டன

3ம் பக்கம் பார்க்க

## திருச்சபை ஐக்கியத்தின் பொன்விழா ஆண்டு 1947 - 1997

# பேராயர் D.J.A. அவர்களின் சமூக நோக்கு

பேராயர் அறிவர் டி.ஜே. அம்பலவாணர் அவர்கள் விசுவாச உறுதி கொண்ட ஓர் ஆன்மீகத் தலைவர் மட்டுமன்றி சமூக பிரக்ஞை மிக்க ஓர் சிறந்த சமூகவியலாளனுமாவார்.

பேராயர் அவர்களது சமூக நோக்கு அவர் தாம் பற்றியிருந்த கிறிஸ்தவ விசுவாசத்தை அடியொட்டியதாகக் காணப்பட்டது. ''இச் சிறியவருள் ஒருவருக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்'' என்ற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருள்வாக்கு பேராயர் அவர்களது அகத்தே உறைந்திருந்தது.

சமூகத்தில் ஏழைகள், எளியவர்கள், அங்கவீனர்கள், ஆதரவற்றவர்கள், உற்றார் உறவினரை இழந்தவர்கள், தம் சொந்த நாட்டுக்குள்ளேயே அகதிகள் ஆக்கப்பட்டவர்கள், ஆகிய மக்கள் தம் துயரங்களை துடைக்கும் பல திட்டங்களை பேராயர் அவர்கள் வகுத்தார். அத்திட்டங்களை சிறப்பாக நடைமுறைப்படுத்தியும், அவற்றை மேற்பார்வை செய்தும், தமது சிறந்த மதிநுட்பத்தினால் ஆலோசனைகள் பல வழங்கியும் அவற்றை நடைமுறைப்படுத்திய ஓர் செயல் வீரனாகத் திகழ்ந்தார். பேராயர் அவர்கள் வகுத்துச் செயற்படுத்திய திட்டங்கள் சமூகத்தில் சமூக புத்தெழுச்சியை உண்டு பண்ணின

பேராயர் அவர்களது சமூகத்திட்டங்களில் சிறுவர் இல்லங்கள், பகல் பராமரிப்பு நிலையங்கள் தொழிற்பயிற்சி நிலையங்கள், அங்கவீனர், முதியோர் இல்லங்கள் என்பவை குறிப்பிடத் தகுந்தன.

சமூகத்தில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என நிரந்தரப்பிரிவுகள் இல்லை, சமூகத்தில் தாழ்நிலையில் உள்ளவர்களுக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கப்படின் அவர்களும் சமூகத்தின் உன்னத புருஷர்களாக, முன் உதாரணங்களாத் திகழ்வர் என்ற சமூக உண்மையினை பேராயர் அவர்கள் கொண்டிருந்தார். தம் சொந்த தாய் தந்தையரை இழந்து சமூகநிலையில் தாழ்ந்திருந்த பிள்ளைகளை அரவணைத்து அவர்களுக்கு உடுக்க நல் உடையும், தங்குவதற்கு சிறந்த இருப்பிடமும், போஷாக்கான ஆகாரமும் அளித்து அப்பிள்ளைகள் சிறப்பாகக் கல்வியைக் கற்றுக் கொள்வதற்கான தற்சூழ்நிலையை ஏற்படுத்தி கொடுத்தார். இவ் வாய்ப்பினை தக்க முறையில் பயன்படுத்திக் கொண்ட பிள்ளைகள் பலர் இன்று பல்கலைக்கழக வாய்ப்பினைப் பெற்று பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்று வருவதையும் சிலர் பல்கலைக்கழகக் கல்வியைக் கற்றுத்தேறி சமூகத்தில் நற்பிரசைகளாக விளங்குகின்றமையும் இன்று நாம் காணலாம். இது பேராயர் அவர்களின் சமூக நோக்கின் தாற்பரியத்துக்கு சிறந்த சான்றாகின்றமை தெளிவானதேயாகும்.

இன்றைய குழந்தைகளே எதிர்கால உலகின் சிற்பிகள் என்ற உண்மையினை நன்கு உணர்ந்திருந்த பேராயர் அவர்கள் எதிர்கால உலகின் தலைவர்களான இளம் பிஞ்சுகள் சிறந்த உடல் நலம் மிக்கவர்களாக, போஷாக்குடையவர்களாக வளருதல் வேண்டும் என்பதனை உணர்ந்து பகல் பராமரிப்பு நிலையங்களை அமைத்து அங்கு சத்துணவுத் திட்டத்தையும், சிறந்த ஒழுக்கம் கல்வியை வழங்கும் திட்டங்களையும் உருவாக்கி வைத்தார். அப் பிள்ளைகள் சமூக விழுமியங்களைக் கற்றுக் கொள்ளும் வகையில் அங்கு கற்பித்தற் செயலை ஏற்படுத்திக்கொடுத்தார்.

சமூக முன்றேற்றம் என்பது தொழில் சார் கல்விக்கூடாகவே உருவாகின்றது என்பதனை நன்குணர்ந்த பேராயர் அவர்கள் இத் தொழிற் சார் கல்வியை ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் பெற்றுக் கொள்ளுதல் அவசியம் என்பதனை உணர்ந்து பெண்களுக்கான பல தொழிற் பயிற்சிக் கூடங்களை ஆரம்பித்து வைதார். இத் தொழிற் பயிற்சி நிலையங்களுக் கூடாக பல்வேறு தொழில் நுட்பங்களையும் பெற்றுக் கொள்ளும் அறிவை விருத்தி செய்ய உதவினார். இத் தொழிற் பயிற்சி நிலையங்களுக் கூடாக தொழில் சார் கல்வியைக் கற்றுத் தேறிய பல யுவதிகள் இன்று தாம் வாழும் சமூகத்தில் அக்கல்விக் கூடாக பயன் மிக்கவர்களாக மிளிர்வதைக் காணலாம்.

ஒரு சமூகத்தில் நற்குண, நற்பிரசைகள் உருவாக்கப்படல் வேண்டும் என்பதனையும், இவ் நற்குண, நற்பிரசைகள் அச் சமூகத்தின் ஆன்மீக விழுமியங்களுக்கு கூடாகவே உருவாக்கப்படுகிறார்கள் என்ற அசையாத நம்பிக்கையும் கொண்ட போராயர் அவர்கள் ஆன்மீக எழுச்சியை உண்டு பண்ணும் தேவாலயங்கள் பலவற்றை பல்வேறு இடங்களிலும் உருவாக்கினார்கள். இவ் ஆலயங்களுக்கூடாக பலர் இறைமகன் கிறிஸ்துவின் அன்பிற்குள் அரவணைக்கப்பட உதவிபுரிந்தார்.

பேராயர் அம்பலவாணர் அவர்கள் ஓர் சமூகத்தின் குருவாகவும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தார். அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பல்வேறு இன்னல்களுக்குள்ளும் உற்படுத்தப்பட்ட துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற தமிழ் மக்கள் தம் அடக்குமுறைக்கு எதிரான நீதியின் குரலாக பேராயர் அவர்கள் உலக அரங்கில் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தார். அன்று இஸ்ரவேல் மக்களை இறைவன் அடிமைதனத்திலிருந்து மீட்டு எடுத்ததைப் போன்று இறைவன் தாம் தமிழ் மக்களையும் அவர் தம் அடிமை வாழ்விலிருந்து மீட்டு எடுப்பார் என்ற அசையா உறுதிமிக்க நம்பிக்கை பேராயர் அவர்கள் உள்ளத்தில் உறைந்து காணப்பட்டது. நீதியின் தேவன், சமாதானத்தின் தேவன்

3ம் பக்கம்பார்க்க

## 'வரலாறு' கண்ட பேராயர்!

புங்கு நகரிலே பூத்த மலராய்
புவி அனைத்தும் ஒளியாய் மலர்ந்த
அகிலமே போற்றும் பேராயர் அம்பலவாணரே,
பள்ளிப் படிப்பினை பரி. யோவானில் தொடங்கி
இங்கிலாந்தில் முழுமையடைந்தீர்கள் .. பின்பு
இறைவனின் அழைப்பை இதயத்தில் ஏற்று
அராலியிலே அருட்பணியினை ஆரம்பித்து
மானிப்பாய் வட்டுக்கோட்டை உடுப்பிட்டி -என
குருவானவராய் பணி செய்தீர்களே.

ஆடுகளின் தலமை ஆயனாய்
இறைவனின் அழைப்பை ஏற்று
திருநிலைப்படுத்தப்பட்டீர்களே
இருபத்திரண்டு ஆண்டுகளாய்
அடியவர்களின் தலைவராய் - ஆடுகளின்
நல்லாயனாய் வாழ்ந்தீர்களே.

இறைப்பணியினையும் சமூகப் பணியினையும்
ஒரு சீராய் அமைத்து
ஏழைகள், திக்கற்றோர், வாழ்வில் - ஒளி
ஏற்றி புதுவாழ்வு அளித்தீர்களே.
யாழ் நகர் முதல் மட்டு நகர் கொழும்புவரை
இறைசெய்தியை வாழ்வின் செய்தியாய்
கொண்டு சென்று விதைத்தீர்களே.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் வாழும் மக்களின்
வாழ்க்கை தரத்தை உயர்த்திடவே
தொழில் வாய்ப்பினை அளித்திடவே
பள்ளி முதல் பண்ணை வரை
பல நலன் திட்டங்களை அமைத்தீர்களே
உலகத்தின் ஒளியாம் இயேசு கிறிஸ்துவை
உலகிற்கு பறைசாற்றிடவே
தமிழ் மக்கள் வாழ்வில் - இயேசுபிரான்
ஒளி வீசிடவே வாழ்வு மலர்ந்திடவே

இறையடியார்களை உருவாக்கும்.
இறையியல் கல்லூரியை
இறைவனின் ஏவுதலில்
தீர்க்கமான தரிசனத்தால்
மருதனார் மடத்தில் மார்புகழ் சேர்க்க
அமைத்தீர்களே.
இறையடிகள் இறையறிவில் வளர்ந்திடவே
தமிழ் மாணவர் கிறிஸ்தவ நூல்களை
அறிந்திடவே
கிறிஸ்தவ தமிழ் நூல்களை உருவாக்க
இறையியல் நூற்பதிப்பு கழக தலைவரானீர்
களே.

ஜகத்தினில் எங்கும் சேவை செய்திடவே
பல நிறுவணங்களை தலமை தாங்கினீர்களே
இலங்கை தேசிய கிறிஸ்தவ சங்க முதல்
யாழ் கிறிஸ்தவ ஐக்கிய சங்கம் வரை
பல சங்க்ங்களை தலமை தாங்கினீர்களே.

இளைப்பாறிய பின்னரும்
இறைப்பணியை வளர்த்தீர்களே - இந்த
பாரினில் வாழ்ந்திடும் மானிடர்
எல்லாரின் மனதிலும் - மணி
மகுடமாய் விளங்கினீர்களே
காலங்கள் பல கடந்தாலும்
உங்கள் நினைவுகளும்
உங்கள் இலட்சிய கனவுகளும் - எங்கள்
இதயத்தில் இருந்து விலகாது

கிறிஸ்தவ இறையியல் கல்லூரி குடும்பம்

# நெஞ்சை விட்டகலா அக் 30

''ஒடுக்கப்படுவோருக்கு ஆண்டவர்
அடைக்கலமாயிருப்பார்
இடுக்கண் நேரும் போதெல்லாம்
ஏற்ற சரண் அவரே
உம் பெயரை அறிந்தோர்
உம் மீது நம்பிக்கை கொள்வர்
உம்மை தோடுவோரை நீர்
கை நெகிழ்வதில்லை''
சங்கீதம் 9-9-10

**ஒக்டோபர் 30**
அந்த நாள்
எமது வாழ்க்கைப் பயணத்தில்
மறக்கவே முடியாத நாள்
எமது வரலாற்றிலும் அழிக்கப்பட
முடியாத நாள்
ஓர் இரவினுள்ளேயே எல்லாவற்
றையும் இழந்து க்தறிய நாள்
எமது நீண்ட பயணத்தின் ஓர்
புதிய அத்தியாயமாகியது அந்த
நாள்

எங்கே போகின்றோம் என்பதை
அறிந்திருந்தனர் சிலர்
எங்கே தான் போவது என்பதை
அறியாமல் பலர்
எங்கனம் போவது என்பதை
புரிந்திருந்தனர் சிலர்
எங்கனம் போவது என்பதை
புரியாமல் பலர்.
உண்பதற்கு பிஸ்கட்டுடனாவது
புறப்பட்டனர் சிலர்
குடிப்பதற்கு நீர் தானும் இன்றி
விரைந்தனர் பலர்.

எம் கால்கள் ஒய்வு கேட்டு
வருந்தின
ஆனாலும் நாம் நடந்தோம்
தன் மீதுள்ள சுமையை இறக்கும்
படி கரங்கள் கெஞ்சின
ஆனாலும் ''சுமையான'' எம்
பயணம் தொடர்ந்தது.

எம்மேல் விழுந்த மழைத்துளியி
னாலாவது
எமது தாகத்தை தீர்க்க முயன்
றோம் - ஆனால்
அது கூட எம்மால் முடியவில்லை
எம்மை இலக்கு வைத்த ''சூரிய
னின் கதிர்களுக்கு'' தப்பிவிட
எமது உள்ளம் பதைபதைத்தது
ஆனால்
அதுவும் எம்மால் இயலவில்லை.
எமது துயரங்கள் நீங்கி விடும் என
நம்பினோம் – ஆனால்
அது ''இன்று மட்டும்'' எம்மைத்
தொடர்கின்றது

எல்லாமே எம்மால் முடியாமல்
போயின - ஆனால்
ஒன்று மட்டுமே எம்மால் ''முடிந்
தது''
இறைவனை நோக்கி எம்மால்
''மன்றாட முடிந்தது''
எம் பாரத்தை அவர் மேல் வைக்க
முடிந்தது
எமது ''நெருக்குதலை'' அவரி
டம் கூறிட முடிந்தது–ஏனெனில்
–ஒடுக்கப்படுவோருக்கு ஆண்ட
வரே அடைக்கலம்
-நெருக்கடியான வேளைகளில்
புகலிடம் அவரே
துன்பம் அனைத்தில் இருந்தும்
எம்மை விடுவிப்பார்
மண்ணில் உள்ள தீமையனைத்
தையும் அகற்றிட
எம்மையும் கருவியாக்கிடுவார்.

ஜ. எஸ். அன்ரனி
இறுதி வருடம்
இறையியல் கல்லூரி

# ஒடுக்கப்பட்டோரின் குரல் டி. ஜே.

அண்மையில் மறைந்த பேராயர் கலாநிதி டி. ஜே. அம்பலவாணர் சமயத்தினூடு மக்கட் தொண்டு செய்த பெரும் ஆன்மீக வியலாளர் மட்டுமன்றி தமிழ் மக்களின் உரிமைக்காக உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் ஓங்கிக் குரல் கொடுத்தவருமாவார்.

தமிழ் மக்கள் எடுக்கப்பட்ட இன மக்களாகவே வாழ்ந்து வருகிறார்கள் என்ற உண்மையையும் அவர்களின் சுதந்திரம் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதனையும் மிகத் துணிச்சலுடன் எடுத்துச் சொன்ன கர்ம வீரர் அவர்.

அவர் தமது மரணம் வரை தமிழர் உரிமைகளுக்காக ஓங்கி ஒலித்துக் கொண்டே இருந்தார். அந்தப் பணியில் இருந்து அவர் ஓய்ந்ததில்லை என்பதனை அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் அறிவார்கள். சுதந்திரம் உயிரனையது என்பது அவரது அசைக்க முடியாத கொள்கையாக இருந்தது. அதனைச் சொல்வதிலும், அதற்காக உழைப்பதிலும் தம்மைப் பெருமளவில் அர்ப்பணித்த பெருந்தகை அவர்.

தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை, அவர்களிடமிருந்து பிரிக்க முடியாத உரிமைகளை அரசு பறித்து வருவது குறித்து வெளிநாடுகளில் பல அரங்குகளிலும் வைத்துத் துணிச்சலுடன் எடுத்துச் சொன்னவர் அவர்.

பேராயர் அம்பலவாணர் ஆண்டகையும், யாழ். கத்தோலிக்க மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் அதி. வந். தியோகுப்பிள்ளை ஆண்டகையும் காரிருள் சூழ்ந்த ஒரு காலகட்டத்தில். அரசியல் தலைமைத்துவம் இல் தவித்து நின்ற யாழ் குடாநாட்டு மக்களுக்கு தஞ்சம் தந்து அவர்களுக்காக அவர்களது பேச்சாளர்களாக குரல் கொடுத்து வந்தவர்கள் என்பது முக்கியபதிவாகும்.

## பேராயர் D. J. A...

வரலாற்றில் செயற்படும் மீட்பர் தமிழ் மக்களாகிய நமக்குப் நீதியை நிலை நாட்டுவார். சமாதானத்தை உண்டுபண்ணுவார், அடிமை வாழ்விலிருந்து மீட்டு எடுப்பார் என்ற உறுதியான விசுவாசம் பேராயர் அம்பலவாணர் அவர்களின் உள்ளத்தில் நிறைந்திருந்தது.

பேராயர் அவர்களின் சமூக நோக்கு குறிப்பாக இலங்கையில் தமிழர் தம் பாரம்பரிய பிரதேசங்களில் மிக ஆழமாகப் பதிந்திருந்தது. அவர் தம் சமூக நன் நோக்குத் திட்டங்கள் இப்பிரதேசங்களில் உறுதியாக வேரூன்றியுள்ளன.

பேராயர் அம்பலவாணர் அவர்கள் சமூக மாற்றத்தை வெறும் கருத்தியைவாகக் கொள்ளாது அதனை ஓர் தரிசனமாகக கண்டு நிதர்சனமாக்கிய ஓர் சிறந்த சமூகவியலாளனாவார்.

ஆக்கம்:—

**டி. எஸ். சொலமன்**

ஈழத் தமிழர்கள் உரிமைக்காக குரல் கொடுத்து வந்த இவ இருவருள் ஒருவராகிய அதி. வண. அம்பலவாணர் ஆண்டகையின் மறைவு ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பெரும் பேரிழப்பாகும் இவர் தமது மந்தையுள் தாமும் ஒருவராக இருந்து தமிழ் மக்களின் சுக துக்கங்களையும். வாழ்வையும், தாழ்வையும் பகிர்ந்து கொண்ட ஒருவராக வாழ்ந்து அவர்களுக்கு வழிகாட்டி வந்தவர்.

### தென் இந்தியாவில்

இந்திய அமைதிப் படையினர் இங்கு மேற்கொண்ட இராணுவ அட்டூழியங்களை தென் இந்தியாவில் நடைபெற்ற தமது திருச்சபையின் பேரவையில் வைத்தே விமர்சிக்கத் தலைப்பட்டார். அது வண. அம்பலவாணர் ஆண்டகை. அதே பேரவையில் சமூகமளித்திருந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆண்டகை பேசிக்கொண்டு இருந்த போது ஒரு துண்டு அவரிடம் அனுப்பியிருந்தனர்.

அதில் குறிப்பிடப்பட்ட செய்தி வருமாறு இலங்கைத்தீவில் நடைபெறும் காரியங்களை இங்கு பேசாதீர்கள். உங்களுக்கு இஷ்டமானால் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் அவை குறித்துப் பேசுங்கள். பிரதமர் ராஜீவை சந்திப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறோம்'' என்பதாகும். ராஜீவை சந்திக்கும் வாய்ப்பை நழுதவிடா விட்டாலும், தாம் எடுத்துக்கொண்ட பணிக்கும் போடப்பட்ட தடையை மேவத் துணிந்தார் ஆண்டகை

வட்டுக்கோட்டை ஆசனக் கோவிலில் நிகழவிருந்த வரலாற்று வைபவ நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்ளும் பொருட்டாக தென் இந்தியத் திருச்சபையின் தலைவர்களை ஒரு குழாமாகவே யாழ்ப்பாணத்துக்கு வருவித்தார். அவர்களுக்காகத் தாம் ஏற்பாடு செய்திருந்த ஒரு பொது வரவேற்பில் வைத்து, யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் கௌவரவ செயலாளராக அப்போது விளங்கிய அங்கிலிக்கன் திருச்சபையின் தற்போதைய யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் வண. பிதா ஜோசப் சர்வானந்தன் அடிகளாரைக் கொண்டும் இந்திய அமைதிப்படைத் தளபதி கல்கத்துக்கும், விடுதலைப் புலிகளின் துணைத் தலைவருக்கும் இடையே நடைபெற்று வந்த கடிதத் தொடர்புகளுக்கு அப்போது நடுவராகக் செயற்பட்டு வந்த யாழ் மாநகர ஆணையாளர் சி. வி. கே. சிவஞானம் அவர்களைக் கொண்டும் நாட்டு நடப்பைத் தெளிவு படுத்தியிருந்தார்.

இவ்வாறாக எடுத்த காரியம் எதுவாயினும் அதில் தோல்வி போகாது நிதானமாக நடந்து கொள்ளும் ஆண்டகையின திறன் வியக்கத் தகுந்தது. நன்றி

### மக்கள் வெள்ளத்...,

ஜெபநேசன் நிகழ்த்தினார்.

### கல்லூரிகளின் மரியாதை

யாழ்ப்பாணக் கல்லூரியிலும் உடுவில் மகளிர் கல்லூரியிலும் வைத்துப் பேராயருக்கான மரியாதை கொடுக்கப்பட்டன. இரு கல்லூரியினதும் 'பாண்ட்' இசைக் குழுவினர் வாத்தியங்களை இசைத்து தமது மரியாதைகளைச் செலுத்தினர்.

### இராணுவ மரியாதை

மானிப்பாய் – உடுவில் வீதியில் வரிசையாக நின்ற இராணுவத்தினர் 'சல்யூட்' அடித்துத் தமது இறுதி மரியாதைகளைச் செலுத்தினர். கல்லறை ஆராதனையின் போது, இராணுவ அதிகாரி ஒருவரும், சில உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். பேராயருக்குத் தாமும் அஞ்சலி செலுத்துவதாக் பதாதைகள் கட்டப்பட்டிருந்தன.

முன்னதாக முந்தைய நாள் இரவு மிஷன் இல்லம் சென்ற இராணுவ அணியினர் மலர் வளையம் வைத்து தமது அஞ்சலியை செலுத்தினர்.

### புளொட், ஈ பி.ஆர். எல். எப். த. வி. கூ. அஞ்சலி

புளொட், ஈ. பி. ஆர். எல். எப். த. வி கூ ஆகிய கட்சிகள் பேராயருக்கு அஞ்சலி செலுத்தி அறிக்கைகளை வெளியிட்டன.

### கல்லறை ஆராதனை

பேராயர் ஜெபநேசன் அவர்களால் கல்லறை ஆராதனை நடாத்தப்பட்டு பேராயரின் பூதவுடல் உடுவில் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. எல்லா மக்களும் கண்ணீருடன் தத்தமது இல்லம் திரும்பினார்.

## றாக்கிங்...

அம்புகள் திசை மாறிப்போயிற்று.

'றாக்கிங்' – அது இப்போது ஒருவரின் உயிருக்கே உலை வைக்கும் அளவிற்குப் போய்விட்டதை நினைக்கும்போது இதயம் தத்தளிக்கின்றது. பேராதனைப் பல்கலைக்கழத்தில் நடந்த றாக்கிங் கொடுமையால் உயிருக்குப்போராடிக்கொண்டிருந்த மாணவன். பிரகாஷ் 26-19-97 இரவு மரணமாகி விட்டான். 'தமிழன்' பேராதனைக்கும் போய் மானத்தைக் கப்பலேற்றி விட்டதை எண்ணும் போது வேதனைகளை வார்த்தைகளில் வடிக்க முடியவில்லை.

'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்பதை என்னுகையில் – இத்தகு செயல்கள் கண்டு நிமிர்ந்து நிற்பதா? கவிழ்ந்து நிற்பதா? எனத் தெரியவில்லை. தமிழன் தனக்குத்தானே செய்து கொண்ட 'றாக்கிங்' கில் தன்னில் ஒருவனை இழந்து விட்டனர்.

'பிரகாஷ்' – அது இன்றுடன் முடியுமா? இனியும் பிரகாஷ்கள் உருவாகுவாகுமா? அது யார் கையில் தங்கியுள்ளது?. ''திருடனாய் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது'' எனும் பாடல் வரிகள் நினைவுக்கு வருகிறது.

## மனிதா! சிந்தி!!

உலகமே போற்றும் இறைவன்
மாட்டுத் தொழுவினில் பிறந்திட்டாரே எதற்காக?
சர்வ வல்லவர் பாதந் தனில்
கல்லும் முள்ளுங் குத்த அலைந்திட்டாரே எதற்காக
உயிர் தரும் உணவானர்
பசியில் தவித்திட்டாரே அதுதான் எதற்காக?
ஜீவ ஊற்று எம் பெருமான்
தாகத்தால் தவித்திட்டாரே
அதுவும் எதற்காக
விண்ணை விட்டு
மண்ணைத் தெரிந்திட்டாரே அதுவும் தான் எதற்காக?
பாவமறியாப் பரமபிதா
பாடுகள் பட்டாரே
அதுதான் எதற்காக?
சிருஸ்டிப்பின் காரணர்
சிலுவையில் அனாதையானாரே
அதுதான் எதற்காக?
மண்ணுலக மானிடா!
இதை சற்றேனும் எண்ணினாயா?
சிந்திப்பாய்!
செயற்படுவாய்!!

லில்லி ஹிமெல்டா சொலமன்
98 கலைப் பிரிவு
உடுவில் மகளிர் கல்லூரி.

## நினைவில் நிறுத்துக.

**நவம்பர்:**

15 கிறிஸ்மஸ் இன்னிசை அனைத்துக் கல்லூரிகள்

16 பேராயர் D. J. A. நினைவு ஆராதனை

17 வண. SIA திருமணம்

19 ஊழியர் ஞான ஒடுக்கம் வட்டுக்கோட்டை

26 ஆதீன சங்க செயற் குழு

30 திடப்படுத்தல் ஆராதனை உடுவில்

## சிறுவர்...

உளப்பாதிப்பை தரக்கூடியன.

இந்தியாவில் ''நாம் பட்டாசு கொளுத்த மாட்டோம்'' என உறுதி எடுத்துக்கொண்ட ஒரு லட்சம் பிள்ளைகளையும் கண்டு நாம் மனம் நெகிழ்ந்து நிற்கிறோம்.

இவ்விடயத்தில் சிறுவர் இல்லங்களை அமைத்து, சிறுவர்களின் வளர்ச்சியில் முழுப்பங்கையும் எடுத்துக் கொள்ளும் அவை ஒரு கருவியாக இருக்க உதவி செய்தமைக்காக எமது முன்னாள் பேராயர் டி. ஜே அம்பலவாணர் அவர்களுக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

வவுனியாக் கல்விக் கல்லூரியிலும் ஒரு முஸ்லீம் மாணவன் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளான் என்ற செய்தி பிந்திக் கிடைத்துள்ளது, 'சிறுபான்மை' எனும் வரையறைக்குள்ளாக்கப்பட்ட இனங்கள் தம்மைத் தாமே அழித்துக் கொள்வது எங்கே போய் முடியப்போகிறதோ தெரியவில்லை. முளையிலே கிள்ளாத பூண்டை இப்போதாவது வேரோடு சாய்ப்பார்களா சம்மந்தப்பட்டவர்கள்?

# மரணத்தால் அழியாத மாமேதை டி. ஜே.

## என் நெஞ்சை நிறைத்த ஐவர்

கவர்ச்சியான தோற்றம்
நிறை மறையின் சிந்தை
சுறை படியா நிறை ஆசான்.
வெள்ளை உடுத்து வரும் காட்சி.
உள்ளத்துள்ளே தூய்மை
வேண்டும் விரும்பி கூப்பிடு.
பெற்றுக் கொள் பேரருள் இயேசுவில்.

சுனன் சோமசுந்தரம்.
சினம் இன்றி வாழ்ந்த சின்னண்ணன்.
பனை போல் நிமிர்ந்து நின்ற
பேராயர் சபாபதி குலேந்திரன்.
அருமையான அருளுரை தந்த
டீ. ரி. நயில்ஸ், ஆயர் டி ஜே அம்பலவாணர்

இவரை நெஞ்சே தினம் நினை.
சீருடை இல்லாது வீதிக்கு வரார்.
ஊரும் எறும்பின் உணவு, விடார்.
இறுமாப்புடைய விசுவாச வீரர் இவர்
நேரம் காத்து வேலை செய்யும்.
தீரர் கனன் சோமசுந்தரம் இவரை
நெஞ்சே தினம் நினை.
அஞ்சேல் பணி தொடர.

அண்ணல் என்ற சொல்லுக்கு
பெருமை சேர்த்து வைத்த
ஆச்சிரம சின்னண்ணன்
ஆசையோடு ஊரார் சுற்றி வேலை செய்யும்
இயேசுவுக்கு இனியவர்
எல்லோர்க்கும் நல்லவர் இவர்.
பெயர் இயேசு சகாயம்.

பனைபோல் நீதிமான் நிமிர்ந்து நிற்பான்.
நின்றார் நிமிர்ந்து நீதியின் வித்தானார்
நிமிர்ந்து திருச்சபை நிற்க
அரும்பணி புரிந்து தேடி வைத்தார் பெருமை
தென் இந்திய திருச்சபைக்கு இவர் எங்கள்
பேராயர் சபாபதி குலேந்திரன்.
வாழ்த்தாயோ இறை நாமம்.

உள்ளத்தை தொட்டு உடைக்கும்
வல்ல அருளுரை ஆற்றிய
டீ. ரி. நயில்ஸ் இவர்
அருளுரை அதிரடி வீரர்
செயலும் பேச்சும் ஒன்றே இணைந்து
வாழ்ந்தவரை நெஞ்சம் மறக்குமோ
இறக்கும் வரை நினை

தேசம் எரியும் போது
வீணை மீட்ட பேரரசன் போல்
இல்லை பேராயர் டீ. ஜே. அம்பலவாணர்
தொல்லை நிறை துன்பத்தில் பங்கேற்று
– நம்மில்
ஒருவராய் நின்ற சாட்சி கண்டு
வாழ்த்தினோம் இயேசுவே

மாட்சிமை என்றும் உமக்கே
முடிந்தது இவர் தம் திருப்பணி
விட்டு வீசி எறிந்து விடாதே
செத்த வித்து முளைக்கட்டும் பலன்
பத்து நூறு ஆகட்டும்
விட்டுப் போனவரை நினைத்து இவர்
சேர்த்து வைத்ததை சேர்த்துக் கொள்ள
- உன் பணியில்
சேர்ந்து விடு இயேசுவின் திருக்கரத்தில்

ஆக்கியோன்:-
**வண. ஆ. வே. யேசுதாசன்**

## மாமலையே! ஏன் மறைந்தீர்

மாமலையே ஏன் மறைந்தீர் – இறை
மாதவனை அடைந்திடவோ
மாமனிதனாம் எம் பேராயரே – நீர்
மறைந்ததன் மர்மமென்னோ

தென்னிந்தியத் திருமண்டலத்தில்
தென் தமிழாம் யாழ் நகரில்
தேனருவி பாய்வது போல - எமைத்
தேற்றியல்லோ ஆதரித்தீர்

வெள்ளியென வழிகாட்டி
வெந்தவர்க்கு வெண்ணிலவாய்
வேரறுந்த மந்தைகட்கு
வேந்தனாகத் துணைபுரிந்தீர்

தந்தையிலாப் பாலகர்க்குத்
தாயிழந்த குழந்தைகட்குத்
தஞ்சமில்லாப் பிள்ளைகட்கு
தங்க நீரும் இல்லமைத்தீர்.

இறையரசு இம் மண்ணில் பரவவிடவே
இறையியற் கல்லூரி காணச் செய்தீர்
இன்பராம் இயேசுமகன் ஊழியத்தை
இங்கிதமாய் இறைத்து விட்டீர்.

எம் அன்னை மகிழ்ந்திடவே
எம் மண்ணை நேசித்தீர்
எம் மனிதர் மாண்புறவே
எம்முடனே வாழ்ந்திருந்தீர்

எம்மன்புத் தந்தையே எம் பேராயரே
எப்படி உம்மை வழியனுப்ப
சிறகிழந்த பறவையானோம்
சீரோடு போய் வாரும்

ஆக்கம்:-
**திருமதி. கிருபா பவசிங்கம்**
உடுவில் திருச்சபை

## பேராயரே ஏன் தந்தீர் பேரதிர்ச்சி

காற்றசைந்தது தென்றல் என்றோம்
கடலசைந்தது அலையென்றோம்
வானசைந்தது இடி மின்னலென்றோம்
ஆயரே நீங்கள் அசையாமல் போனதை
என்னவென்போம்?

ஆண்டுகள் பல இருந்து
ஆண்டவன் சேவையாற்றி
வேண்டிய வேளையிலே
விடைபெற்றுப் போனதேனையா
ஆண்டவர் அழைப்பையேற்று
அவனிதனில் அவருக்காய்
ஆசானாய் நின்று பல
அரும் பெரும் சேவை செய்து
மாண்புறும் வீரனாய்
மாபெரும் சரித்திரம் படைத்து
மீண்டும் வரா யாத்திரையை
ஏனையா நீர் எடுத்தீர்.

தென் இந்தியத் திருச்சபையின்
தானைத் தளபதியே
தந்த பொறுப்பதனை
தளராமல் செய்துவிட்டு
நொந்த உள்ளங்களாய்
எமையெல்லாம் வாட விட்டு
வாடாத மலராக
வாழ்வு தரும் வள்ளலிடம்
சென்று விட்ட செய்தி கேட்டு
செயலிழந்து நிற்கின்றோம்.

கலங்கரை விளக்காக
காலமதில் நீங்க ளெமக்கு
இருந்ததை நினைந்து நெஞ்சம்
இசைக்குது சோக ராகம்
இறைவனது பணியதனை
இடர்கள் வந்த போதிலும்
எடுத்துச் செல்லும் வழியதனை
எழிலாக எமக்குக் காட்டி
சென்றதை நினைந்து நெஞ்சம்
இசைக்குது வீர ராகம்

நீதிக்காய் உழைக்கும் மக்கள்
நீடித்து வாழ்வதில்லையா?
நீங்கள் தந்த பேரதிர்ச்சி
நீங்காத பேர் இழப்பு
நீங்கள் படைத்த சரித்திரத்தை
நீங்காமல் தொடர்ந்து செய்ய
வேண்டுதல் செய்யுமையா
எமக்காக இயேசுவிடம்
விடை தந்தோம் ஆயரே
விண்ணரசில் உமதாத்துமா
சாந்தி பெற சாற்றுகிறோம் துதிமகிமை
தூயவர் இயேசுவுக்கே.

**வண. ரி. ஜெயசந்திரன்**
தெ. இ. தி. வத்தளை

## அச்சுவேலி ப. ப. நி விளையாட்டுப் போட்டி

மேற்படி விளையாட்டுப் போட்டி ஒக்டோபர் மாதம் அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரியில் சபைப்போதகர் சகோ. கு. ஐ, குமரேசன் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட திரு. மித்திரரஞ்சன் பவனியாலும், மாலையாலும் கௌரவம் பெற்றார். தீபம் ஏற்றலின் பின்பு பிரதம அதிதி நிலையக் கொடியையும், வண. ரி. எச். வசந்த குமார் அச்சுவேலி ஆலயக் கொடியையும் ஏற்றிய பின்பு நிகழ்வுகள் பிரதம அதிதியால் ஆரம்பிக்கப்பட்டது.



பிரதம அதிதியான திட்டப் பணிப்பாளர் தனது உரையில் ''தகுந்த முன் ஆயத்தமும் மெய்வல்லுநர்போட்டிகுக்கு ஒத்த தராதரமும் சிறப்பு, இந்து ஆசிரியர் ஒத்துழைப்பு, சாரணர் அணி, கிராம மக்களின் திரண்ட பங்களிப்பு என்பனவற்றிற்கு சபைப் போதகருக்கு எனது நன்றி. அரசு மிஷன் பாடசாலைகளை தமது ஆளுகைக்குள் எடுத்த போது கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் எமது முன்னாள் பேராயர் டி. ஜே. ஏ. இடம் ''இனி கல்வி சம்பந்தமான உங்கள் முயற்சிகள் யாவும் கீழே விழுந்து விட்டது'' எனக் கூறினார். அதற்கு பேராயர் ''இனித்தான் நாம் மென் மேலும் உயருவோம்'' என்றார். இன்று அரச பாடசாலைகளுக்கு நிகராக எமது முன்பள்ளிகள் இயங்குவது பெருமையே. KNH செயலர் ஜீவஜோதி அவர்களுக்கும் எனது நன்றி'' என்றார்

இதைத் தொடர்ந்து அச்சுவேலிக் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் திருமதி. பு. கணபதிபிள்ளை தனது உரையில் – ''வறிய குடும்பத்தில் பிறந்த நான் இக் கல்லூரியில் கற்று, இன்று அதிபராக இருக்கிறேன் எனில் அப்பெருமை கிறிஸ்தவ பெரியார்களையே சாரும். ஆரம்ப கால வளர்ச்சிகு வித்திட்ட கிறிஸ்தவ சமூகத்தை என்றும் என்னால் மறக்க முடியாது. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் என்னை ஒரு இந்துவாக வைத்துள்ளது. இன்று உயர்ந்த ஸ்தானங்களில் இருப்போரின் உயர்ச்சிக்குக் கிறிஸ்தவ சமூகமே நெம்புகோலாக இருத்துள்ளது. ஏனோ தானோ எனாமல் சிறப்பாக இப் போட்டிகள் நடைபெற்றன. சிலர் குறுகிய மனப் பான்மையினால் மகா வித்தியாலயம் என பெயர் மாற்றியபோது குமரேசன் போதகர் தனது அழைப்பிதழில் ''கிறிஸ்தவக் கல்லூரி' எனப் பெயர் போட்டது எனக்கு மகிழ்ச்சி'' என்றார்.

6ம் பக்கம் பார்க்க

# நம்பிக்கையிற் களிகூருங்கள்!

நம்பிக்கை என்பது இரு வகைப்படும் (1) உலக நம்பிக்கை (2) தேவ நம்பிக்கை, உலக நம்பிக்கை மனுஷருக்கு ஏமாற்றத்தைப் ஏற்படுத்தும். உதாரணமாக் ஆகார் ஆபிரகாமின் மீது நம்பிக்கை வைத்திருந்தும் அவளும் அவள் ஆபிரகாமுக்குப் பெற்ற குழந்தை ஸ்மவேலுடன் கைவிடப்பட்டாள்.

அது மட்டுமல்ல, ஊரியா தாவீதை நம்பி மனைவியைப் பறிகொடுத்தான். தாவீது சவுலை நம்பி மோசம் போனான். சங்கீதம் 118 : 18 கூறுவதாவது ''மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாய் இருப்பதே நலம். எனவே உலக நம்பிக்கை மனுஷருக்கு எவ்விதத்திலும் சந்தோஷத்தைத் தராது.

**பிள்ளைகள் விழா கட்டுரைப் போட்டியில் 13வயதுப் பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை**

மனுஷனை நம்புவதாலல்ல' தேவனை நம்புவதாலேயே நிரந்தரமான சந்தோஷம் கிடைப்பதோடு அதில் களி கூரலாம். எல்லாம் அவரால் ஆகும். மனுஷனால் கூடாதது தேவனால் கூடும். ரோமர் 12:12 நம்பிக்கையில் சந்தோஷமாயிருங்கள் என்று கூறுகிறது. வயது சென்றிருந்த போது ஆபிரகாம் தேவனின் வாக்குத்தத்தை நம்பியதால் அது நிறைவேறியது. ஈசாக் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து பலி செலுத்தச் சென்றபோது அவர் நம்பிக்கை வீண்போகவில்லை.

லூக்கா 2:25:33 சிமியோன் கர்த்தரின் வருகைக்காகக் காத்திருந்தார், இயேசுவைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்க பெற்றோர் ஆலயத்துக்குக் கொண்டு சென்ற போது, தன் நம்பிக்கை நிறைவேறியதைக் கண்டு களிகூர்ந்து மகிழ்ந்தார். 81வயதுக் கிழவி அன்னாளும் அவர் பிறப்பினால் களிகூர்ந்து மகிழ்ந்தார். மரியாளும் தன் வயிற்றிலே உலக இரட்சகர் பிறந்தார் எனக் களிகூர்ந்து மகிழ்ந்தார். யோவான் 11:22-44 இப்படி மார்த்தாளும் மரியாளும் அவர்மேல் நம்பிக்கை வைத்திருந்தால் லாசருவை உயிரோடு கண்டு மகிழ்ந்தார்கள். ரோமர் 15:13 இப்படி நம்பிக்கையின் தேவன் சமாதானம் தருகிறார்.

செல்வி ஏ. ஜே. டாலிங்ரன்
வட்டுக்கோட்டைத்திருச்சபை

ஆபகூக் தனக்கு எவ்வளவு க்ஷ்டம் ஏற்பட்டாலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்பேன் என்கிறார். பவுல் தன் போராட்ட வாழ்க்கையிலும் களிகூர்ந்து மகிழ்ந்தார். எலியா இரு விதவைகளின் பிள்ளைகளை உயிரோடு எழுப்பியதால் அங்கு பெரிதான நம்பிக்கையோடு கூடிய மகிழ்ச்சியையும் காணக் கிடைத்தது. இவர்கள் சாரிபாத் விதைவையின் மகனும், சுனேமியாளின் மகனுமே ஆகும்.

எனவே தேவன் மேல் வைக்கும் நம்பிக்கையிலே தான் நாம் களிகூர்ந்து வாழ முடியும்.

# லீவைஸ் நினைவும், இல்ல விழாவும்



எமது முன்னாள் மிஷனறி வண. லீவைஸ் போல்டிங் ஐயரின் 206 வது பிறந்ததின நினைவு நாள் ஆகஸ்ட் 22ம் திகதி மானிப்பாயில் நடைபெற்றது இது சிறுவர் இல்லப் பிள்ளைகளின் ஒன்று கூடல் நாளாகக் கணிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் இல்லப் பிள்ளைகள் இந்நாளில் ஒன்று சேர்ந்து முழு நாள் நிகழ்வாக இதனைச் சிறப்பித்தனர். காலை ஆராதனை 9.30 மணிக்கு மானிப்பாய் ஆலயத்தில் நடாத்தப்பட்டது. அருளுரையை வண. ஏ. வி. யேசுதாசன் நிகழ்த்தினார். இதைத் தொடர்ந்து பிள்ளைகளின் கலை நிகழ்வுகள் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரியில் நடைபெற்றன. இல்லப் பொறுப்பாளர்கள், குருமார்கள் பாடசாலை ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர். அருள்மனையில் தேநீர் உபசாரமும் மதிய உணவும் வழங்கப்பட்டது.

இதை நடாத்த உதவிய யாவருக்கும், விசேடமாக மெமோறியல் ஆங்கிலக் கல்லூரி அதிபர், ஆகிரியர்களுக்கும் சம்மந்தப்பட்டவர்களுக்கும் தமது நன்றிகளைக் கூறுகின்றனர்.

உதய தாரகை

'உங்களவன்' எழுதும் — தொடர் கதை

# நிம்மதி எங்கே?

அப்போது அவனின் முகத்தைப் பார்க்க வேண்டுமே அவனின் கண்ணில் கண்ணீர் வடிந்து, அவனின் துக்கத்தைப் பிரதிபிம்பம் போல் படம் பிடித்துக் காட்டியது.

இன்று இரண்டில் ஒரு முடிவு தனக்குத் தெரிய வேண்டுமென நினைத்த ராஜா வீட்டிற்குச் செல்கிறான். வீட்டிற்குச் சென்ற ராஜா இருக்கையில் அமர்ந்து கொண்டு தன் தங்கையின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஏய் எங்கே போட்டு வாறே '' தனது தங்கையின் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்த ராஜா அவள் வந்தவுடன் கேட்ட கடூரமான கேள்வியில் வேணி அதிர்ச்சியடைந்துவிட்டாள். ''வந்து .. வந்து... நான் ஒருவரை...'' ''ஒருவரை மனசார விரும்புகிறேன் அப்படித் தானே...'' ''ஆமண்ணா '' 'அவனை மறந்துடு...' 'அண்ணா ' 'அவனொரு கொள்ளையன் அவனை மறந்திடு...' 'முடியாதுண்ணா முடியாது நீங்க இதுவரை சொன்ன சொற்களையெல்லாம் நான் தட்டாமல் இருந்து வந்துட்டன். ஆனா... இந்த விஷயத்திலை மட்டும் என்னாலை ..' 'நீ அவனை மறக்கலேன்னா என்னை மறந்துடு...' 'நோ அண்ணா நோ என்னாலை உங்களையும் மறக்க இயலாது. அவரையும் மறக்க இயலாது' 'தங்கச்சி என்னை கோபக்காரனாக்காதை ' 'அண்ணா... என்னை ' 'உன்னை .. சொல்லும்மா... சொல்லு நீ என்ன தான் சொல்லப்போறே .. உன்னை அம்மா அப்பா போன காலத்திலேர்ந்து உன்னைப்பராமரிச்சு உன்னை வளர்த்து ஆளாக்கின இந்த அண்ணன்கிட்ட நீ என்னதாம்மா சொல்லப் போறே. என்ன எச்சரிக்கை விடப்போறே சொல் ' 'அண்ணா நீங்க என்னை வளர்த்து ஆளாக்கினீங்க ஆனா என் மனசை வளர்த்து ஆளாக்கினது யார் தெரியுமா? அந்த கொள்ளையர் தலைவர் நசீர்தானண்ணா நசீர்தான்'' 'அம்மா உண்மையான காதலா இருந்தால்... தன் உயிரைக் கொடுத்துக்கூட நிறைவேற்றி வைக்கிறவனும்மா உன் அண்ணா. ஆனா... நீ ஒரு கொள்ளைக் காரனையில்லம்மா காதலிச்சிருக்கே...' 'அண்ணா அவர் உங்களுக்கும் இந்த உலகத்துக்கும் கொள்ளைக் காரனாயிருக்கலாம் .. ஆனா .. அவருதான் என் வருங்காலக் கணவருன்னோ எனது தற்போதைய ஆருயிர் காதலனென்றோ உங்களுக்குத் தெரியாது' 'அம்மா சின்ன வயசுல நீ எதைக்கேட்டு நான் வாங்கித் தாறதில்லை. சொல்லு நீ பலூன் கேட்பே உடைஞ்சாலும் பரவாயில்லேன்னு வாங்கிக் கொடுப்பேன். இப்ப நீ நஞ்சு கக்குற நாகத்தை யெல்லோ பிடிச்சுத்தரச் சொல்றே. என் தங்கைக்கு... நான் சின்ன வயசுலர்ந்து என் கண்ணாக வளர்த்தாற தங்கைக்கு .. நான் எப்படி யம்மா நச்சுக்கக்கும் நாகத்தைப் பிடிச்சுக் கொடுப்பேன்' 'அண்ணா அவரைப்பத்திப்பேசற தகுதி உங்களுக்கு கிடையாது. இனியும் அவரைப்பற்றி ஒரு வார்த்தை சொன்னீங்க... நான் பத்திரகாளியாய் மாறிடுவேன்...' 'தங்கச்சி அவனைப் பத்திப் பேசற தகுதி எனக்கில்லாவிடினும் உன்னைப்பத்திப் பேசற தகுதி எனக்கில்லையெண்டு நீ



சொல்ல முடியாது என் தங்கச்சி பாம்பிலை காலை மிதிக்கிற போது அது கொத்திப்புடுமே எண்டு அககறை கொள்கிற தகுதி இந்த அண்ணனுக்கில்லையாம்மா சொல்லு ' 'அண்ணா நீங்க அவரைப் பாம்பு எண்டு சொல்றீங்க நான் அவரைத் தேன் என்கிறேன்' 'காதலுக்கு கண்ணில்லையம்மா' 'நம்மட இளஞ் சமுதாயத்தை அடக்க ஆதிகாலத்தினர் தந்த தகாத பழமொழி அது' 'இப்போ நடை முறை மூலம் நிறைவேறிக்குட்டிருச்கு'

'அண்ணா நீங்க என்ன செய்வீங்க ஏது செய்வீங்கன்னு எனக்குத் தெரியாது. ஆனா... எனக்கு நசீர் இல்லாமே வாழ்க்கை இல்லை...' 'உனக்கு நானா அந்த நசீரா முக்கியம்?' 'இருவரும் தான்' அப்பிடீன்னா ஒன்றில் என்னைமற. இல்லைன்னா அவனை மற'

'அண்ணா... நான் சொல்றதைக் கேளுங்க.. நீங்க அவரோடை என்னைப்போக விடலைன்னா.. நான் தற்கொலை கூடச் செய்ய நேரிடும்'

'உனக்கு நான் கடைசியாய்ச் சொல்றேன். விருப்பமுன்னா நீ என்கிட்டே இரு இல்லைன்னா அவன் கிட்டே போயிடு' 'நான். அவன்கிட்டை தான் போவேன் காதலின் பாரம்பரியம் பற்றும் அதன் சக்தி வாய்ந்த தன்மை பற்றியும் எனக்கு மட்டும்தான் தெரியும். அதைப் பற்றி எல்லாம் .. ஒண்ணுமே படிக்காத முட்டாளுகளையெல்லாம் வைச்சு சொல்றேனே. என் புத்தியை செருப்பாலை அடிக்கணும்'

'ஆமம்மா நான் படிக்காத முட்டாள்தான். நான் படிக்காட்டிலும் பரவாயில்லை. தங்கச்சியையாவது படிக்க வைக்கணும் என்கிற ஆதங்கத்திலை, என் ரத்தத்தை வியர்வையாக்கி மண்ணில் சிந்தினேனே. நான்

6ஆம் பக்கம் பார்க்க

# வன்னியிலிருந்து ஒரு குரல்!

கருணை கூர் முகம் தான் எங்கே
காத்திடும் கரம் தான் எங்கே
பெருந்தகை நிமிர்ந்த காலை
பொலிந்திடும் சபை தான் எங்கே
வரும்பகை அறிந்து உண்மை
வழங்கிய மொழிதான் எங்கே
அரும்பெரும் தமிழர் செல்வம்
அம்பலவாணர் எங்கே

துயருறும் தமிழர் துன்பம்
தூயவா எடுத்துச் சொன்னாய்
நபந்த உன் வார்த்தை கேட்டு
ஞாலமே விழித்த தையா
சிவந்த எம் மண்ணின் துன்பம்
சிலுவையை துணையாய்
கொண்டு
புவனமே அறிய வைத்த
புண்ணியா எங்கே போனாய்

நித்திய வாழ்வைத் தேடி
நீ மேய்ப்பனை அடைந்தபோதும்
கத்திடும் தமிழர் பூமி
கண்ணீரரல் நனையுதையா

அஞ்சிடும் தமிழர்க்கு எல்லாம்
ஆறுதல் சொன்னாய் ஐயா
துஞ்சிடும் போது எல்லாம்
துணிவினை தந்தாய் ஐயா
மிஞ்சிடும் கொடுமை கண்டு
மீட்பரைத் துணையாய் கொண்டு
அஞ்சிடா உறுதியோடு
அகிலமே அறிய வைத்தாய்

புன்னகை முகத்தை கண்டால்
பொங்கிடும் சினமும் ஆறும்
பூவிழிக் கண்ணைக் கண்டால்
புனிதமாம் அன்பு தோன்றும்

**"வாழும் போது மனிதற்கெல்லாம் வார்த்தையாலே நன்றி சொல்வோம் வார்த்தையின்றி போகும் போதுமௌனத்தாலே நன்றி சொல்வோம்"**

மேய்ப்பனாய் மண்ணில் தோன்றி
மேன்மைகள் பல நீ செய்தாய்
வாய்மையும், அன்பும், சேவை
வாழ்விலே துணையாய் கொண்
டாய்

தீமையை கண்டு மண்ணில்
தீயென எரித்தாய் அன்புத்
தாயென வாழ்த்த எங்கள்
தகமகன் எங்கே போனாய்

தேவ ஊழிய நிறைவைக் கண்டு
திருச்சபை பொலிய வைத்தாய்
பாவச் சிலுவையைச் சுமந்து யேசு
பக்குவம் உண்ணில் கண்டோம்
பூவென மலர்ந்த அந்த
புன்னகை முகத்தை - மண்ணில்
தேவ தருசனம் போலவிங்கே
திரும்பவும் காண்ப - தெப்போ

உலகெலாம் வியந்து போற்ற
உயர்ந்த நல் மனிதனாக
பலருடைய துன்பம் தன்னை
பகிர்ந்திடும் தெய்வமாக
நலமிழந்தவர் துயரம் போக்கி
நல்வழித் துணையாக
நிலவென எறித்த ஐயா
நீ இருட்டான தேனோ ?

சத்திய வேதம் தன்னை
தமிழில் நீ - சொல்லும்போது
அற்புதம் அதனால் இந்த
அகிலமே அடங்கி நிற்கும்

அன்புடன் சொன்னாய் என்றால்
அனைத்துமே நிறைவாய் போகும்
இன் மொழி உனது வாயால்
எப்படி கேட்போம் ஐயா

ஏழைகள் விடிவை நாடி
எத்தனை பணிகள் செய்தாய்
வாழ குழந்தைகள் கல்விக்காக
வாழ்வையே நிறைவாய் தந்தாய்
நாளை விடியலுக்காக மண்ணில்
நடந்தவை அனைத்தும் சொன்
னாய்
சூழ இருந்தவர் எல்லாம் ஏங்க
தூயவா எங்கே போனாய்

தூய எம் குருவே ஐயா
துயருறும் எங்கள் நெஞ்சை
தாயென கருணை பூத்து
தமிழர்கள் பூமியெல்லாம்
காயவே தீமை மண்ணில்
கர்த்தரின் சபையில் சொல்லி
கனியவே அன்பு நெஞ்சில்
கலந்திடச் செய்வாய் ஐயா

**- வன்னி மக்கள் -**

## அச்சுவேலி..,

இதைத் தொடர்ந்து அச்சுவேலி ரோமன் கத்தோலிக்க பங்குத் தந்தை வணபிதா யேசுரட்ணம் தமது உரையில் – "புரட்டஸ் தாந்தவரின் கல்விப்பணிகள் அன்றும் இன்றும் சிறந்து விளங்குகின்றன. முன் பள்ளி அவசியமான ஒன்று" என்றார். இதை அடுத்து உடுப்பிட்டி சபைக்குருவான வண. ரி. எச் வசந்தகுமார் உரையாற்றிய பின்பு பாரியார் திருமதி. ரி. எச். வசந்தகுமார் பரிசில் வழங்கினார்.

இந்நிகழ்வில் மெதடிஸ்த ஆசிரியர்கள், மாணவர்கள், அச்சுவேலி பிரதேச பாடசாலை அதிபர்கள், கிராமசேவையாளர்கள், வைத்தியர்கள் போன்றோரும் கலந்து சிறப்பித்தனர்

## பாராட்டுகின்றோம்

யாழ்பல்கலைக்கழக கலைப் பீடமாணவன் ஜெயசீலன் இரட்ணம் 06-09-97 நடை பெற்ற பட்டமளிப்பு விழாவில் பல்கலைக் கழகத்தில் அனைத்து துறைகளிலும் திறமைபெற்று துரைராஜா ஞாபகார்த்தத் தங்கப் பதக்கத்தையும் அனைத்து பீடங்களின் அடிப்படையில் திறமை பெற்ற மாணவனாகவும் தெரிவு செய்யப்பட்டு பல்கலைக்கழக தங்கப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டார். இவரை யாழ் பல்கலைக் கழக கிறிஸ்தவ மாணவர் நிலையத்தின் சார்பில் வாழ்த்துக்களையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம் அவரின் பணி என்றும் சிறப்படைய மனதார வாழ்த்துகின்றோம்.

**கிறிஸ்தவ மாணவர் நிலையம்**
**திருநெல்வேலி.**

## கத்தோலிக்கத் திருச்சபையின் அனுதாபக்கடிதம்

"உங்கள் தென்னிந்தியத் திருச்சபையைச் சோந்த போதகர். ஐ அருள்பாலனின் அகால மரணம் கோணாவில், கிளிநொச்சியில் நடந்தது பற்றிப் பத்திரிகையில் படித்தோம். உங்களை மிகவும் வேதனைப்படுத்தும் இச்சம்பவத்திற்கு எமது வருத்தத்தைத் தெரிவிக்கின்றோம். எமது செபங்களையும் ஆழ்ந்த அனுதாபங்களையும் அவரின் குடும்பத்தவருக்குத் தெரிவிக்கவும். நாம் தொடர்ந்தும் இறைவனில் நம்பிக்கை கொண்டிருப்போம்" என்று கத்தோலிக்கத் திருச்சபையின் யாழ் பேராயர், நமது பேராயருக்குக் கடிதம் அனுப்பிவைத்தார்.

# காலமானார்கள்

## ஏணஸ்ட் சபாரத்தினம் அப்பாத்துரை

திரு எணஸ்ட் சபாரத்தினம் அப்பாத்துரை 21 – 09 – 97 இல் கனடாவில் மறுமைக்குள் பிரவேசித்தார். இவர் கொழும்புத் திருச்சபையின் அத்தியட்சாதீனப் பிரதிநிதியாகப் பலகாலம் கடமையாற்றியவர். இலங்கை வேலை கொள்வோர் சம்மேளனத்தின் செயலாளராக உத்தியோகம் வகித்த இவர் இளைப்பாறிய பின் கனடாவிற்குத் தன் குடும்பத்துடன் சென்றார்

இவரது மனைவி எய்லீன் இரு வருடங்களுக்கு முன் மரித்தார். இறஞ்சித், இரவீன், றோகான், சுரேஸ், அனுஸ்லா ஆகிய இவரது பிள்ளைகள் கனடாவில் வசித்து வருகின்றனர். இவர் முன்னாள் யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்ப பாடசாலை அதிபர் திரு. திருமதி J N. அப்பாத்துரையின் மகனாவார். அமரர். வண. K. S ஜெயசிங்கம் அவர்களின் மைத்துனருமாவார்.

## அல்பிரட் அரியரட்ணம் ஹிச்கோவ்

அன்னார் 27-09 97 சனிக்கிழமை அன்று மறுமைக்குள் பிரவேசித்தார். இவர் சுகிர்தரட்ணத்தின் அன்புக் கணவரும் மீனலோசினி, காந்தருணசிங்கம், சந்திரசீலன் கனடா, மனோரஞ்சி கிருபா (நவஜீவனம்) வின் தகப்பனும் திருமதி தம்பிராசா (போதகர் அம்மா) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற அருட் திரு. L. N ஹிச்கோவ் அவர்களின் சகோதரனும், காலஞ் சென்ற I. P. துரைரட்ணத்தின் மைத்துனரும், த கிருபானந்தராஜா நவஜீவனம் (இயக்குனர்) த குருகுலராஜா, கிளிநொச்சி (உதவி கல்விப்பணிப்பாளர்) ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் அடக்க ஆராதனை 28 – 09 – 97 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 3.00 மணிக்கு நடைபெற்று பூதஉடல் தருமபுரம் சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது இவ்வடக்க ஆராதனையை அருட்திரு. அன்ரனி, அருட்திரு. V. S பத்மதயானன் அருள்திரு. ஜோன். எஸ். செல்வம், அருட்சகோதரன் டானியல் ஆகியோர் நடாத்தினர் பொது அமைப்புக்களின் தலைவர்கள், மற்றும் அதிபர்களினால் இரங்கல் செய்திகளும் வழங்கப்பட்டன. நவஜீவனம் பிள்ளைகளினால் விசேட பாடலும் பாடப்பட்டது

## விசேட ஆராதனை

யாழ்ப்பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் நிலையம் 1997ம் ஆண்டில் வெளியேறும் இறுதி வருட மாணவர்களுக்கு இறை ஆசி கூறியும், வாழ்த்து கூறியும் விசேட ஆராதனை 17-08-97ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நிலையத்தில் நடைபெற்றது. இவ் வருடம் மொத்தமாக 17 மாணவர்களுக்கு இவ் சிறப்பு வழிபாடு நடாத்தப்பட்டது.

இவ்வாராதனையில் முற் பகுதியை மாணவர்கள் குருவின் தலைமையில் நடாத்தினர்கள். தெளியேறும் மாணவர்களுக்காக விசேட செபங்கள் ஒவ்வொரு வருட மாணவர்களின் ஊடாக ஏறெடுக்கப்பட்டது. இவ்வாராதனையில் வெளியேறும் மாணவர்களை வாழ்த்தியும், இறை ஆசி வேண்டியும் சிறப்புப் பாடல் ஒன்று ஏனைய மாணவர்களால் பாடப்பட்டது. இறை செய்தியை அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த வண. எஸ். ஜெபமோஹன் வழங்கினார். திருவிருந்து ஆராதனையை குரு. வண. S. மில்ரன், வண. S. I. ஆனந்தராஜா ஆகியோரால் நடாத்தப்பட்டது. ஆரம்ப செபமும் இறை ஆசியும் வண. சேவக் சாம் அல்பிரட் அவர்க்ளினால் வழங்கப்பட்டது வெளியேறும் மாணவர்களுக்கு ஞாபகார்த்தமாக நிலையத்தின் ஊடாக மரத்தால் செய்யப்பட்ட சிலுவைகளை குரு வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது. 3ம் வருட மாணவி N. நந்தினி அவர்களால் வரவேற்புரை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து குரு வெளியேறும் மாணவர்களின் பெயர்களை வாசித்து அவர்களைக் குறித்து சில வார்த்தைகள் பேசி, அத்துடன் இந்த நிலையத்தின் நோக்கத்தையும், அதன் பணிகளையும் எடுத்து கூறியதோடு இந்த இடம் "ஒரு ஐக்கியப்பட்ட இடம்" (Ecumenical Center) எனவும் கூறினார். சபைப்பாகுபாடு அற்ற ஒரு இடமாக கருதப்படுகின்றது. எனவே அதை தொடர்ந்து வளர்க்க வேண்டிய பொறுப்பு உங்களுடையது. என்று கூறினார். அதனை தொடர்ந்து வெளியேறும் மாணவர்களின்

8 ஆம் பக்கம் பார்க்க

## நிம்மதி...

முட்டாள் தான். ஆனா நான் ஒண்ணு மட்டும் சொல்றேன். இந்த அண்ணனின் வார்த்தையை மீறி நீ போற இல்லை நீ அதன் பலனை அனுபவி பே இது கடவுள்மீது சத்தியம்'

அவள் கதவைத் திறந்து. கேற்றைத் திறந்து, வெளிவீதிக்கு வருகிறாள். அப்போது எங்கிருந்தோ வந்த வசு வண்டி ஒன்று அவளை மோதிவிட்டுத் தப்பிச் செல்கிறது தனது ஒரே ஆதரவான தங்கையும் கொல்லப்பட்டதைக் கண்ட ராஜா அழுகிறான். அவனை அனாதையாக்கியது நசீர்தான் என அவன் உணர்கிறான்.

(தொடரும்

# உதயதாரகை பேராயர் அம்பலவாணர் காலமானார்

தமிழிலே மறைந்தார் என்பதனை காலமானார் என்று குறிப்பிடுகின்றோம். இதனுடைய பொருள் ஒரு சகாப்தமாகி விட்டார். அல்லது ஒரு கால கட்டமாகி விட்டார். அல்லது சரித்திரத்தில் ஒரு பகுதியாகிவிட்டார் என்பதாகும். இதனை ஆங்கிலத்திலே "EPOCH" என்று குறிப்பிடுவார்கள். பேராயர் அம்பலவாணர் மறைவுடன் ஒரு காலம் முடிவடைகின்றது. தென்னிந்தியத் திருச்சபை வரலாற்றிலும், ஈழத்தமிழர் வரலாற்றிலும் ஒரு காலம் முடிந்து விட்டது. 69 வருடங்ளுக்கு முன்னர் திருமதி அன்னா அன்னம்மா புங்குடுதீவில் ஏற்றி வைத்த ஞான தீபம் இன்று கண்ணுக்கெட்டா கருத்தொளியில் சென்று மறைந்து விட்டது ஆனால் இந்த 69 வருடகாலம் பேராயர் அம்பலவாணரின் வாழ்வு பலவித சாதனைகளை நிகழ்த்தியதாக விருந்தது. கல்லூரி மாணவனாக அவர் ஏற்படுத்திய சாதனைகள் பல! இறையியல் மாணவனாக அவர் ஏற்படுத்தியவை எண்ணில, டங்கா! மத போதகராக, இறையியல் அறிஞனாக பேராயராக தமிழர் தலைவனாக அவர் சாதித்தவை ஏராளம்! ஏராளம்.

இவருடைய வாழ்வின் வெற்றிக்கு காரணம் இயேசு பிரான் மீது கொண்டிருந்த தளராத நம்பிக்கையாகும். ''கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசைக்கப்படாத சீயோன் பர்வதத்தைப் போலிருப்பார்கள் என்ற வசனத்திற்கிணங்க பேராயர் அவர்கள் ஒருபோதும் மனந்தளராதிருந்தார் அவர் இறைவனுக்கு பயந்திருந்தபடியினால் வேறுயாருக்கும் பயப்படவில்லை. பேராயர் அம்பலவாணனின் வாழ்வு போராட்டம் நிறைந்தது அநீதியைக் கண்டு, அடக்கு முறையைக் கண்டு பாராபட்சத்தைக் கண்டு அவர் எரிமலையாய் சீறி எழுந்தார். எத்தர்களும், ஏமாளிகளும் நிறைந்த உலகத்திலே பேராயர் அம்பலவாணர் நீதி நெறிக் காவலனாக விளங்கினார்.

தமிழ் மக்கள் மீதும் தமிழ் மண்ணின் மீதும் அவர் உண்மையான பற்றுதல் கொண்டு விளங்கினார். அவர் நினைத்திருந்தால் உலகத்தின் எப்பகுதிக்கும் சென்று குடியேறியிருக்கலாம், ஆனால் அவர் இறுதிவரை "பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே'' என்று தான் நம்பினார். தான் மட்டுமன்றி தனது குடும்பத்தினரையும் அவ்வாறு நம்பும்படி செய்தார். முழுமனதுடன் தன்னையும தன் குடும்பத்தையும் இறை சேவைக்கும் மக்கள் சேவைக்கும் அர்ப்பணித்தார்.

இவருடைய கொள்கைகளைக் கண்டு சிலர் அதிருப்தி அடைந்தனர். ஆனால் அதனைக் குறித்து அவர் கவலைப்படவில்லை. பவுல் அப்போஸ்தலன் கூறியது போல ''உங்கள் எண்ணத்தை அற்பமாய் எண்ணினேன்'' என்று அவர் உறுதியோடு கூறினார். உலக மக்கள் தன்னைப் போற்றவேண்டுமென்றோ, தன் மீது அன்பைச் சொரிய வேண்டுமென்றோ அவர் என்றுமே எண்ணியதில்லை. இதனாலேதான் அவர்சீரழிந்ததும் சிறுமைப்பட்டதுமான நமது சமுதாயத்தின் ஒரு இரும்பு மனிதனாக செயற்பட்டார்.

அறிவும், ஆற்றலும், பக்தியும், நேர்மையும் கொண்ட ஓர் தலைவனை நம் மத்தியில் சிறிது காலம் வாழ விட்டமைக்காக இறைவனைத் துதிப்போமாக.

இந்த மகா வீரதியாகியின் இலட்சியங்களையும் கனவுகளையும் செயற்படுத்துதலே அவருக்கு நாம் செய்யும் கைமாறாகும். நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்திற்குள் பிரவேசித்து தமது படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள். ✠

# நமது பேராயர் ஓர் தீர்க்கதரிசி வானமும் அழுதது!

தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீனத்தின் இரண்டாவது பேராயராகிய பேராயர் டி. ஜே. அம்பலவாணர் 1971 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி வட்டுக்கோட்டை பேராலயத்தில் பேராயராக அபிஷேகம் பண்ணப்பட்டார். இலங்கையிலே அப்பொழுது கிறிஸ்தவர்கள் அனேக பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. 1960களில் சிங்கள பௌத்த பேரினவாதம் கூர்மையடைந்து கொண்டிருந்தது. தென்னிந்தியத் திருச்சபை யாழ். ஆதீனத்தின் அடித்தளமாக விளங்கிய நன்கொடை பெறும் பாடசாலைத் திட்டம் (Assisted Schools) 1960 ஆம் ஆண்டு நீக்கப்பட்டது. மிஷன் பாடசாலைகள் அரசுடமைகள் ஆக்சப்பட்டன. இந்தச் சட்டம் பின்னர் நீக்கப்பட்டது. எனினும் இலங்கை அரசாங்கத்தினுடைய சிந்தனைகள் எந்த நோக்கில் சென்று கொண்டிருந்தன என்பதனை புலப்படுத்தியது.

இவ்வாறாக கிறிஸ்தவ மக்கள் இலங்கையிலே தமது எதிர்காலத்தைக் குறித்து சோர்வடைந்த நிலையிலே தான் 43 வயது நிரம்பிய வண. டி. ஜே. அம்பலவாணர் தமிழ் புரட்டஸ்தாந்து மக்களின் தலைவராகப் பதவி ஏற்றார். இளமை பொருந்திய அம்பலவாணர் பேராயர் ஆகியதனைக்குறித்து அப்பொழுது பலரும் மகிழ்ச்சி அடைந்தனர். யோவேல் தீர்க்க தரிசியின் வார்த்தைகளை எண்ணிப் பூரிப்படைந்தனர்:

அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்க தரிசனஞ் சொல்லுவார்கள்: உங்கள் மூப்பர் சொப்பனங்களையும்; உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். (யோவேல் 2 20) வயலின் போன்று செயலாற்றுவார்.

பேராயர் அம்பலவாணர் பக்தியும், சிறந்த மதிநுட்பமும், அயராத உழைப்பும், தளராத உறுதியும் கொண்டவர். எந்த வயதிலும் வாலிபன் போல செயலாற்றும் திறன்மிக்கவர். அவர் அடிக்கடி தமது ஊழியர்களைப் பார்த்து உங்கள் சுகம் உங்கள் நினைப்பின்படியே அமைகிறது என்று கூறிக் கொள்வார். (You are as healthy as you think) ஒடுக்கப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர். ஏழைகள் மீது அவர் மிகுந்த அன்பு கூர்ந்தவராயிருந்தார்.

ஒடுக்கப்பட்டவர்களுக்கும் உரிமை மறுக்கப்பட்டவர்களுக்கும் குரல் கொடுத்தல் அவருடைய இயல்பு. இதனாலே தென் இலங்கையில் இருந்த பிரமுகர்களும், சில வெளிநாட்டு அறிஞர்களும் அவரைத் தவறாக புரிந்துகொண்டனர். எகிப்து நாட்டின் அரசகோபத்தை துறந்த மோசே முனிவர், அமெரிக்காவின் கறுப்பு இன மக்களின் சிவில் உரிமைகளுக்காகப் பாடுபட்டு உயிர் துறந்த டாக்டர் மாட்டின் லூதர் கிங், இந்தியாவிலே தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காக தன் வாழ்வை அர்ப்பணித்த டாக்டர் வி. ஆர். அம்பேத்கார் ஆகியோர் இவருக்கு உந்து சக்திகளாக விளங்கினார்கள். ஜவகர்லால் நேரு அவர்கள் தமது அருமை மகள் இந்திரா பிரியதர்ஷினிக்கு எழுதிய வசனம் ஒன்றை பேராயர் அடிக்கடி நமக்கு ஞாபகம் ஊட்டுவார் ''வரலாற்றை எழுதுவது நல்லது ஆனால் வரலாற்றை உருவாக்குவது அதனைவிட மேலானது, என்பதே.

பேராயர் அம்பலவாணருடைய இறையியல் சிந்தனைகள் பெரும்பாலும் பேராயர் சபாபதி குலேந்திரனுடைய இறையியலை ஒட்டியதாகவே இருந்தது. பவுல் அப்போஸ்தலனால் முன்வைக்கப்பட்டு புனித அகுஸ்தீனாரினாலும், மார்ட்டின் லூதரினாலும், கார்ல் பார்த்தினாலும் விளக்கப்பட்ட மீட்பியலுக்கு விசுவாசமாகவே இருந்தார்.

திறமையும் நற்பண்பும் ஒருங்கே அமையப் பெற்ற மனிதர்களை காண்பது மிகவும் அரிது. திறமை படைத்தவர்கள் உலகிலே பலர் இருக்கின்றார்கள். ஆனால் ஆற்றலுடன் நற் பண்புகளையும் வாய்ககப் பெற்ற ஒரு சிலரே உலகில் இருக்கின்றனர். அத்தகைய ஒரு தலைவர் நமக்கு கிடைத்தமைக்காக நாம் இறைவனைப் போற்ற வேண்டும்.

இறப்புச் செய்தி எம்மை வந்தடைந்த அந்நேரம், வாழ்வில் மறக்கவே முடியாதது. மிக இன்பமான வேளைகளும், மிகவும் துன்பமான வேளைகளும் எம் நெஞ்சை விட்டு அகலவே முடியாது. செய்தி கிடைத்த அரை மணி நேரத்திற்குப் பின் வட்டுக்கோட்டை மக்களுடன் சேர்ந்து வானமும் அழுதது. பேராயர் அம்பலவாணரினதும் ஆசியுடன் ஊழியத்துக்குப் புறப்பட்ட போதகர் குழுவின் இறுதிக் குழுவில் நானும் ஒருவன் என்பதில் நான் பெருமையடைகிறேன்

பேராயரின் இறுதி ஆராதனை நடைபெற்ற அன்று காலையும் வானம் தனது கண்ணீர்த் துளிகளில் ஒரு சிறிதைச் சிந்தத்தான செய்தது. இன்று மழை வந்து எல்லாவற்றையும் குழப்பப்போகிறதோ எனும் ஐயம் யாவர் மனதிலும் ஏற்படத் தொடங்கிற்று ஆனால், தான் பேராயரின் இறுதிக் கிரியை நடக்கும் இடத்துக்குப் போனால் என்ன நடக்கும் என்பதைத் தெரிந்து கொண்ட மழை சிறிது நேரத்துக்குப்பூமியை த்தீண்டவில்லை. ஆம்-தனது கவலையை வெளிப்படுத்தவோ, என்னவோ வானம் வேலை நிறுத்தம் செய்தது.

மக்கள் மனதில் பேராயர் எவ்வளவு தூரத்துக்கு இடம்பிடித்திருக்கிறார் என்பதை நாம் காணமத வேறுபாடின்றி பேராயரின்

8 ஆம் பக்கம் பார்க்க

# பக்தியும் துணிவும் மிக்கவர் டி. ஜே.

அருளுரையில் எஸ். ஜே.

''சிறந்த பக்தியையும், மனத் துணிவையும் ஒருங்கே பெற்றவர் முன்னாள் பேராயர் டி. ஜே'' என்றார் பேராயர் எஸ் ஜெபநேசன். அன்னாரது இறுதி ஆராதனையில் அருளுரை ஆற்றிய போது அவர் மேலும் கூறியதாவது.

''பேராயர் டி. ஜே. யின் கெம்பீரத் தோற்றத்தையும், ஆலோசனைத்திறனையும், கெம்பீரப்பேச்சையும் நாம் இனிக்காணப் போவதில்லை. யாழ்ப்பாணக்கல்லூரி-கிறிஸ்தவ கல்லூரி என்பது போல் தெ. இ. தி. யாழ். ஆதீனம் டி. ஜே. யுடையது என்று சொல்லுமளவிற்கு அவர் சிறந்த பணியாற்றினார். தோற்றம் இறப்பு இதற்கு இடைப்பட்ட காலம் தான் மிக முக்கியம். டி. ஜே. இக்காலத்தில் பெரிய பணிகளைச் செய்தார். ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர் ஒரு மோசே போல், அம்பேத்கார் போல் விளங்கினார். தண்ணீர் தாழ்வான பகுதியை நோக்கிச் செல்வது இயல்புபோல டி. ஜே. இத்தகு மக்களைத் தேடிச்சென்று பணியாற்றினார். எழுத்தாற்றம், பேச்சாற்றல் கொண்ட டி. ஜே. தனது பணி வாழ்வில் துடுப்பாடி பெரு வெற்றிகளைக் குவித்தார். பாடசாலைகள் சுவீகரிப்பின் போது துணிச்சலாகச் செயலாற்றி 2 பாடசாலைகளைப் பாதுகாத்தார். ஜோன்ஸ்கடரினது குடும்பம் ஊழியக் குடும்பமது போல் பேராயரது குடும்பமும் ஊழியக் குடும்பம். அவரது ஆற்றல், வல்லமை என்பன எமக்குக் கிடைத்த பிரசாதங்கள்.

ஒருநாளில் ஒருமணி நேரமாவது வேதம் வாசிப்பார். என்னுடன் பயணம் செய்யும் போது, தற்செயலாக அவர் கண்ணயர்ந்து போனால் அவரது வாயிலிருந்து ''ஜீசஸ் ஜீசஸ்'' என்ற முணுமுணுப்பே வரும். அவர் ஆல் போல் நிமிர்ந்து நின்று, பலா போல் கனி தந்தார்'' என்றார் பேராயர்.

### வானமும்...

யாழ்ப்பாணம் எனும் சாடியில் இருந்த பயிரை எடுத்து, எங்கும் வேர்விடத் தக்கதாக தரையில் ஊன்றினார் பேராயர் D J. A. அது வன்னி, கிழக்கு, கொழும்பு என்று எங்கும் வேர் விட்டது. மண் கமழும் இறையியல் வேண்டும் எனும் நோக்கில் CTS ஐ தாபித்தார். நான் அதன் பழைய மாணவன் என்பதில் எனக்கும் பெருமை தான். பிள்ளைகள் இல்லம், நம்பிக்கை இல்லம், என அவரது பணிகள் தொடர்ந்தன. ஒரு சிறந்த கர்மவீரர் எம்மை விட்டுப் போய்விட்டார். திருச்சபையுடன் அவர் பணி நிற்கவில்லை. அவர் திருச்சபை அபிமானி, இன அபிமானி, தேச அபிமானி. அவரது பணிகளைத் தொடர்ந்து செய்வதே நாம் அவருக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலி.

உங்களவன் —

### விசேட...

சார்பில் செல்வி. தக்ஷாயினி உரையாற்றினார். தாம் பெற்ற அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து அங்கிலிக்கன் சபையின் சார்பில் வண. S. P நேசகுமாரும் வண. சேவக் சாம் அண்ணன் அவர்களும் ஆசிச் செய்திகள் வழங்கினர். செல்வி. செறினா, தனலக்குமி ஆகியோரால் வெளியேறும் மாணவர்களின் குணங்களைக் கொண்டும் அவர்களைப்பற்றியும் ஒரு பாடல் இயற்றப்பட்டு பாடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இறுதியாக முதலாம் வருட மாணவன் உயிரோவியத்தினால் நன்றி உரை வழங்கப்பட்டது. அதன் பின்னர் யாவரும் மதிய போசனத்தில் பங்கு பற்றினர்.

மாலை, 2.00 — 3.30 மணி வரை கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறுதியில் இறுதி வருட மாணவர்கள் வாழ்த்துக் கூறி வழி அனுப்பப்பட்டனர்.

### மூன்றாம் பக்கக் கட்டுரை

இவ்விதழின் மூன்றாம் பக்கத்தில் வெளிவந்த கட்டுரையை எழுதியவர் சா. ஆ. தர்மரத்தினம் ஆவார். 'உதயன்' பத்திரிகையில் வெளிவந்த இக் கட்டுரை மறு பிரசுரமாகிறது. தவறுக்கு வருந்துகின்றோம்.

### காலமானார்
### திருமதி
### கிறேஸ் சின்னம்மா
### விஜயரட்ணம்
### (இளைப்பாறிய ஆசிரியை)

திருமதி கிறேஸ் சின்னம்மா விஜயரட்ணம் 20 - 09 - 97 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

இவர் திரு. J. N. விஜயரட்னத்தின் அன்பு மனைவியும், மித்திரதாசன் (USA), காலஞ்சென்ற மித்திரானந்தன், மற்றும் மித்திரநேசன் (குவைத்), மித்திரரஞ்சன் (தென் இந்திய திருச்சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனரஞ்சினி (USA), இந்திரா USA), ஜெயந்தி (குவைத்), ஜெயந்தினி (ஆசிரியர் யாழ்ப்பாணக்கல்லூரி), ஆகியோரின் அன்பு மாமியாரும், செரூபினி, மைக்கேல், றமேஸ், சிவானி, கதரீன், சலோமி, ஜோசுவா, அஞ்சனா, அஞ்சுதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இவரது நல்லடக்க ஆராதனை வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெற்றுப் பின்பு ஏழாலை வடக்குச் சேமக்காலையில் தகனம் செய்யப்பட்டது.

ஆராதனைகளை வண. எஸ் பி. ஜெயசிங்கம், வண. எஸ். ரி. ஆனந்தன், வண. எஸ் மில்ரன் ஆகியோர் நடாத்தினர் பேராயர் D. J A இறை ஆசி வழங்கினர். அஞ்சலி உரையை திரு. க. பாலசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர் நிகழ்த்தினார்.

### அன்புடன் அழைக்கின்றனர்

16-11-97 இல் நடைபெறவுள்ள பேராயர் D. J. A. நினைவு ஆராதனைக்கு சகலரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். வட்டுக்கோட்டை ஆசனக் கோவிலில் நடைபெறவுள்ள ஆராதனை, மாலை 3.00 மணிக்கு நடைபெறும்.

✳

### நவாலி வை. எம். சீ. ஏ. ஜெபவாரம்

எதிர்வரும் 9-11-97 முதல் 15-11-97 வரை நவாலி வை. எம். சீ ஏ நிறுவனம் உலக ஜெபவாரத்தைக் கொண்டாடுகிறது. 9-11-97 ஞாயிறு காலை வழிபாட்டுடன் ஆரம்பமாகி, தொடர்ந்து சில இடங்களில் ஒவ்வொரு நாளும் கூட்டங்கள் நடாத்தப்படும்.

✳

### நவாலியில் கோலாகல பொன் விழா

நவாலித் திருச்சபையில் தென்னிந்தியத் திருச்சபையின் பொன்விழா கடந்த செப்டெம்பர் மாதம் 28ம் திகதி கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இது முழுநாள் விழாவாக காலை 9.00 மணியளவில் ஆரம்பித்து மாலை 4.30 மணியளவில் நிறைவு பெற்றது. காலை 9.00 மணிக்கு நன்றி செலுத்தும் ஆராதனை ஒன்று நடைபெற்றதைத் தொடர்ந்து, திருச்சபை மூப்பர்களைக் கௌரவிக்கும் ஒரு நிகழ்வு நடைபெற்றது.

திருச்சபையின் மூப்பர்களும், நவாலியில் பொன்விழாக் காலத்துள் சேவையாற்றியவர்களும் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார்கள். பொன்விழாக் காலத்துள் சேவையாற்றிய பின்வருவோர் பரிசுப் பொதி வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அவர்கள் :-

வண. டி. ஆர். அம்பலவாணர் 1963 — 1965
வண. எஸ். பி. ஜெயசிங்கம் 1979 — 83
வண, கிறிஸ்ரோ றொபேர்ட்ஸ் 1983 — 87
வண. ஏ ஜெயக்குமாரன் 1987 — 88
வண. வி. என். தர்மகுலசிங்கம் 1987 — 95

சமூகமளிக்காதவர்களுக்கு பரிசுப் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டன.

மதிய உணவு யாவருக்கும் வழங்கப்பட்டதையடுத்து பகிரங்கக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதன் பின்னர் வண. டி. சி. இரட்ணசிங்கம் குழுவினரின் வில்லுப்பாட்டு சபையாரை மகிழ்வித்தது. பின்பு தேநீர் விருந்துடன் விழா நிறைவு பெற்றது.

### அளவெட்டி, சண்டிலிப்பாயில்...

அளவெட்டி. சண்டிலிப்பாய்த் திருச்சபைகள் இணைந்து அளவெட்டியில் கூடி ஒரு திருவிருந்தாராதனையில் பங்கு கொண்டன. 28 - 08 - 97 இல் நடைபெற்ற இவ்வாராதனை நவாலிக் குரு வண. எஸ். சீ. ஆர்ணல்ட் அவர்களினால் நடாத்தப்பட்டது. சபைகளின் குரு வண. ஏ. எஸ். ரி. ஆனந்தன் உதவி புரிந்தார். இறையியல் கல்லூரியின் விரிவுரையாளர் வண ரி தேவநேசன் அருளுரையாற்றினார்.

### கவித்துளியில் சில நிமிடம்..

மாபெரும் மந்தை தனை
மாண்புடனே கட்டிக் காத்து
ஓய்வுதனைப் பெற்று
அயராமல் வாழ்ந்தவரே!

கண்ணியமாய் கடமை தனைக்
கட்டிக்காத்த சுடரொளியே!
கண்ணிரண்டால் தேடுகின்றோம்
கண்ணீரே வருகுதையா!

அசையாத தொண்டு செய்து
அனைவரையும் காத்த ஆயர்
அழியாத துயில் கொள்ள
சிந்தையில்எமக்குநிந்தையேனோ?

மேய்ப்பராய் இருந்து எம்மை
நல்வழி காட்டிய உம்மை
இறைவன் தன் மந்தையில்
சேர்த்திட அழைத்தாரோ?

நீர் கண்ட தரிசனங்கள்
நிறைவேறிய பெருமையுடன்
நித்திய இறைவனடியில்
நித்திரை செய்கிறீரோ?

காலங்கள் பல சென்றிடினும்
நீர் செய்த இறை சேவை
பாலைவனத் தடிச் சுவடாய்
பதிந்திருக்கும் அடியோர் நெஞ்சில்

ஆராதனை இதிலே
அடியோர் யாம் சேர்ந்து
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

செல்வி செ. சுரேக்கா
வவுனியா திருச்சபை
ஆண்டு — 11 மாணவி

### இழப்புக்கோர் 'இலக்கணம்'!

திருச்சபையின் 'பெருந்தூணை'த்
திருடிவிட்டகொடுஞ்சாவின்
திசைநோக்கித் துடித்தழுதே
வருத்தமுறும் மானுடர்தம்
வார்த்தைப் படையலிது!
அர்த்தமுழும் பதவிக்கு
'அணி லனாய்' வீற்றிருந்த
'ஆயனாம்'! நேற்றுவரை,
திக்கெட்டும் ஆளுமையால்
'திருச்சபை'யின் புகழோங்க,
மக்கட் பணி செய்த
'மதத்தலைவா' எங்களது
பக்கத்தே துணைநின்று
பாதுகாப்பளித்தவன் நீ!
இறக்கும்வரை, எங்கள்
'இயக்க சக்தி' யெனத்
தயக்கமிலா முடிவெடுக்குந்
தகை சா ற 'பேராயப் -
பெருந்தகை' யாய் அந்நாளில்
பேராற்றல் உடன் உழைத்தே;
உலக்கத்தின் பார்வைக்கெம்
'உரிமைகளை' உணர்வித்தாய்!
'கலவரங்கள்' சூழ்ந்தெம்மைக்
கலக்குகின்ற போதெல்லாம்
அருகிருந்து தென்பூட்டி,
ஆதரித்தாய்! இனியெங்கள்
நிலவரங்கள் எப்படியோ?
நிர்க்கதியோ? எங்களது
'தலவிருட் ம்' என்றிருந்தே
தலைசாய்ந்த 'அம்பலத்து -
வாணன்' உன் திருப்புகழை
வார்த்தைகளால் அலங்கரித்தே,
போற்றுகிறோம் 'பா'ப் புனைந்து!

— ஆக்கம் -
ஜெ. கி. ஜெயசீலன்

இப்பத்திரிகை வட்டுக்கோட்டை ஆதீனக் காரியாலயத்தில் உள்ள அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சகத்தில் உதயதாரகை முகாமையாளர் சகோ பி. தேவதாஸ் அவர்களால் 1997 ஆம் ஆண்டு செப்டெம்பர் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.